அர்

'BALABHASKARAN' 'Tamil Daily'

# பாலபாஸ்கரன்

... யாழ்ப்பாணம் 1915ம் ஆ ஆகஸ்ட் மீ 27-ம் உ வெள்ளிக்கிழமை காலை

### பத்திரக்கிரயம்

| | | |
|---|---|---|
| ஒருமாசத்துக்கு | சதம் | 50 |
| 3 மாசத்துக்கு ... ... | 1 | 25 |
| 6 ,, ... ... | 2 | 25 |
| ஒருவருஷத்துக்கு ... ... | 4 | 00 |
| **தபாலிலனுப்ப** | | |
| ஒருமாசத்துக்கு ... ... | 1 | 00 |
| 3 ,, ... ... | 2 | 75 |
| 6 ,, ... ... | 5 | 25 |
| ஒருவருஷத்துக்கு ... ... | 10 | 00 |
| **வாரமொருமுறை வெள்ளிக்கிழமைகளில் அனுப்ப** | | |
| மாசம் | சதம். | 60 |
| ஷ 3 | 1 | 80 |
| ,, 6 மாசத்துக்கு | 3 | 62 |
| ஒருவருஷத்துக்கு ... | 7 | 25 |
| வாரமொருமுறை | | 50 |

தனிப்பிரதிசதம் இரண்டு
இந்தியாவுக்கு காலணா.

---

எமது பத்திரிகையைச் சாதிபேதம் சமயபேதம் மதபேதம் பாராது நாம் நடத்துவதால் நமக்குத் தமிழ் பேசுபவர்களெல்லாம் ஆதரிப்பதாக வாக்குக்கொடுத்திருக்கிறார்கள். பிறவிடங்களிலே உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் யாழ்ப்பாணத்தவர்களும் நகரத்துச் செட்டிப்பிள்ளைகளும், வியாபாரிகளும் உத்தியோகஸ்தர்களுமான மகமதியர்களும் ஆதரித்துவருவராகவும் தமது வியாபார விளம்பரம் முதலானவைகளை இதிலே பிரசுரிப்பதாகவும் தமது அபிப்பிராயங்களையும் விசேஷ புதினங்களையும் காலத்துக்குக் காலம் எமது பத்திரிகைவாயிலாகத் தெரிவிப்பதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். பரோபகாரமான சகல விஷயங்களும் பிரசுரிக்கப்படும். சாஸ்திர சம்பந்தமான விஷயங்களும் மனோசாஸ்திர வசியசாஸ்திர விஷயங்களும் கல்வியோடொத்த சகல விஷயங்களும் இதில் [illegible]

## யுத்தம்

சேர்மனியர் பதினொரு நாட்களாய்க் கடும் பிரயத்தனம் புரிந்து அதிக கஷ்டத்துடன் நீமென் ஆற்றின் இடது பக்கத்திலும் ருஷியாவின் மேற்குப்பகுதியிலுமுள்ள கொவ்னோக் கோட்டையைப் பிடித்தனரென்றும், நீமெனின் வலது கரையிலுள்ள கோட்டைகளெல்லாம் ருஷியா ஆதீனத்தில் இருக்கின்றனவென்றும், சேர்மனிய சேனைகள் அந்த ஆற்றைக் கடக்கப் பிரயாசப்பட ருஷியர் தடுத்தனரென்றும், மேல் நாரா யுத்தகளரியிலும் நாராவுக்கும் பக்ஹுக்கும் இடையிலும் யுத்தம் மிகபயங்கரமாய் நடக்கிறதென்றும், நோவோசியோர்ஜிவ்ஸ்க் என்ற இடத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள கோட்டைகளெல்லாவற்றையுஞ் சேர்மனியர் இடைவிடாது சுடுகின்றனரென்றும், 19உ தந்தி கூறுகின்றது.

கொவ்னோக் கோட்டையைப் பிடித்த சேர்மனியர் அப்பட்டணத்தில் தரித்து நீமெனிலும் ஆறுகளுக்கிடையிலுள்ள பகுதிகளில் முன்னேறினரென்றும், சேர்மனியர் ஒஸ்சோவிச்சுக் கோட்டையை 17-ம் 18-ம் திகதிகளில் பிடிக்கப் பிரயாசப்பட்டும் முடியாது பின்னிட்டனரென்றும், நோவோசியோர்ஜிவ்ஸ்குப் பகுதியில் மிகக் கடுமையான இரத்தப் பிரவாகயுத்தம் நடக்கிறதென்றும், சேர்மனியரின் பிரேதங்கள் ருஷிய யுத்தகளத்துள் குவியல் குவியல்களாய்க் கிடந்தனவென்றும், சேர்மனியருடைய பாரிய பிரங்கிகள் குண்டுமாரி பொழிந்து ருஷிய பீரங்கிகளையமர்த்தி உவாக்ரூ நாரா ஆறுகளுக்கிடையிலிருந்த கோட்டைகளைத் தகர்க்க ருஷியர் பின்னிட்டு உவாக்ரூ ஆற்றின் வலது கரையில் தங்கினரென்றும், அதனால உவாக்ரூ விஸ்துலா ஆறுகளுக்கிடையிலுள்ள கோட்டைகளின் வடப

# பாலபாஸ்கரன்

குதிரைப் பிடிப்பதில் சேர்மனியர் தங்கள் முழுப்பலத்தையும் பாவிக்கக் கூடியதாயிற்றெனவும் உ௦உ தந்தி கூறுகின்றது.

பிறெஸ்ற்—லீற்றோவ்ஸ்குக்கு வடமேற்கே 2-மைல் தூரத்தில் ஸகிறிவிக்கோவா-கூரு-பெலஸ்ரூவிப்னிற்சா என்ற பகுதியில் சேர்மனியரின் பெருந்தொகையான சேனுவீரர் எதிர்க்க ரூஷியா தடுத்தனரென்றும், விப்னிற்சாவுக்குக் கிட்ட சேர்மனியரின் சாவுகளை ரூஷியர் குதிரைப்படை யுதவியுடன் தடுத்தப்பின்னிடச் செய்தனரென்றும், நோவோ-சீயோர்சிவ்ஸ்குக்குக் கிட்ட உவிக்ருவின் இடதுகரையைச் சேர்மனியர் பிடித்தபின உவிக்ருவின் வடமேற்கே தொடங்கி விஸ்துலாவரைக்கும் எதிர்த்தனரென்றும், இப்பகுதியில் சேர்மனியர் இடைவிடாமல் குண்மோரிபொழிந்து அங்கேயுள்ள கோட்டைகளை அழித்தனரென்றும், சேர்மனியர் கஅ-ந் தேதி பின்னேரம் வைனாசிலோப்பகுதியில ஓர் கோட்டையைப் பிடித்து அதிக நஷ்டத்துடன் சாக்லீறோற்சிம் பகுதிக்குப அதற்குப் பின்னேயும் முன்னேற ரூஷிய சேனை பின்னிட்டதென்றும் அடுத்த நாள் சேர்மனியர் யுத்தம்புரிந்து ரூஷியர் நின்ற ஸ்தானத்தைப பிடித்தனரென்றும், ரூஷியர் பின்னிட்டுப் போகும்பொழுது ஓர் பாலத்தை உடைத்து வடபகுதியில தாங்கள் தங்கின கோட்டைகளை விட்டுப்போயினரென்றும், உக-வ தந்தி கூறுகின்றது.

மிகாக்குடாவில் காவலாக நின்ற ரூஷிய போர்க்கப்பற் கூட்டம் சேர்மனியரின் பலத்த பெரிய கப்பற் கூட்டத்துடன் யுத்தம்புரிந்து பின்னிட்டது. உ-ஙை

## பரிசு பரிசு!

☞ பின்வரும் கேள்விக்குச் சிறந்த உத்தரம் சொல்லுபவருக்குப் பரிசுகொடுக்கப்படும். பரிசுபெறுபவர் பெயரும் விடையும் பத்திரிகையில் வெளியாகும்

(க) மலையிலும் பெரியதுயாது?
பிரமாணமென்ன? [பாது

(உ) ஆகாயம் பூமியிலும் பார்க்க விசேஷித்தது
பிரமாணமென்ன?

இக்கேள்விக்குப் பதலெழுதுவோர் இக்கப்போமிலே தமதுநாமத்தை எழுதிப் பதலெழுதும் கடிதத்தோடு சேர்த்தனுப்பவேண்டும்.

பெயர்.........................................

விலாசம்.........................................

விடை.

(1) மலையிலும் பெரிது "நிலையிற்றிரியா தடங்கியான் றோற்றம்"

பிரமாணம்— நிலையிற்றிரியா தடங்கியான் றோற்ற மலையிலுமாணப்பெரிது "திருவள்ளுவர்"

(2) பூமி ஆகாயத்திலும் விசேஷித்தது, செய்யாமற் செய்த உதவி.

பிரமாணம் செய்யாமற்செய்த உதவிக்கு வையகமும் வானகமுமாற்றலரிது. திருவள்ளுவர்

---

மேற்படி வினுவுக்கு அனேகர் விடையெழுதியபோதும் மேற்படி விடையே சரியாகக் காணப்பட்டது இதையெழுதியவர் பெயரை வெளியிட விரும்புகிறாரில்லை. இதற்காக ரூபா 5 பரிசனுப்பப்பட்டது. "ஏழாலைவாசி" சி. பி. எஸ். மேல்பார்த்துக்கொள்ப்பது—என்பதே விலாசம்.

---

# பாலபாஸ்கரன்.

[illegible] ஆகஸ்டு மீ 26 உ.

### புகையிலைச் சுருட்டுக் கைத்தொழில்.

(தொடர்)

நாட்களில் விரும்பினும் பாவிக்கிறார்கள். அனேக பெற்றோர் பிள்ளைகளை புகையிலைத் தொழிலுக்கு விடாமல் கால்படிப்பு என் படிப்பித்து வைக்கிறாரென்ற இப்போ வருந்தக்கூடிய அவ்வளவாக இத்தொழில் சிறப்புள்ளதாக விருக்கிறது.

எனம் அத்திலக்காத்து பாலசிங்க மவர்கள் நமது நாட்டில செல்வ பரிபாலனத்தைப் பற்றிப் பேசியபோது தென்னிந்திய மகமதியரோடு நாம் வியாபாரங்களில் எதிர்த்து நின்று தொழிலில் அனுகூலமடைய முடியாதென்று சொன்னார் அது போலவே சுருட்டுக் கைத்தொழில்செய்பவர்களின பட்டான வழக்கபழனமுகங்களாலும் அவர்கள் உடை முதலியன வற்றாலும் நாம் அவர்களோடு எதிர்த்து நிற்க முடியா தென்றால் அன்னிய தேசத்தவர்களா லெப்படி முடியும் ஆகவிலதிகஞ் செலவானல் மானமழிந்து மதிகெட்டுப் போனதிசை எல்லார்க்குங் கள்ளனு பேய்பிறப்புத் தீயனும் நல்லார்க்கும் பொல்லனு காடு,, என்றபடி 300 ரூபா சம்பாதிக்கக்கூடிய ஓர் சுருட்டு வியாபாரி 3ம் வகுப்பு றெயில் வண்டி கப்பல்களிலும் 30 ரூபா சம்பாதிக்க முடியாத ஒரு கிளாக் இரண்டாம வகுப்பு றயில்வண்டி கப்பல்களிலும் பிரயாணம் செய்வதையும் பார்க்கிலோம் இனி அவர்கள் தயவு தாட்சணியமோ மிக விசேஷம். எப்படியெனில் ஒருவன் வழிதப்பிப் போனால் அவனுக்குப் பள்ளிக்கூடத்திற் பிள்ளைகளும் பார்க்க ஆதரவாக உதவுவதும் இன்னும் மரியாதையாய் நடத்துவதும் சுருட்டுபவர்களே.

அவர்களின் தருமசிந்தனை பின் வருவனவற்றால் விளங்கும் சொத்தி, முடம், சப்பாணி, குருடு, முதலிய அங்கப்பழு தள்ளவர்களுக்குச் சபபள மெடுக்கும் வேளைகளில தலைக்கேதாவது இட்டு உதவுகிறா-கள் எத்தனையோ வறியவர்கள் சுருட்டு மாலைகளில் சபள மெடுக்கும் வேளைகளில் பிச்சைச் சபபள மெடுக்கிறார்கள். (வரும)

### கஞ்சா.

சட்டநிருபண சபையிலே, கஞ்சாவைப்பற்றிப் பேச்சு நிகழ்ந்தபின் பல வைத்தியர் தங்களுக்கு [illegible] மாற்கூடிய சகாயஞ் செய்யும்படியும் கஞ்சாவினால் [illegible] டைக்கும் லாபத்தையும் தவறிப்போய் விட்டதென்று [illegible] வருத்தமுற்றனரென வைத்தியர்களே சந்தி [illegible] [illegible] அனுப்பியும் ஆராய்ந்தோம் [illegible] கஞ்சா சில மருந்துகளுக்கு வேண் [illegible] [illegible] விட்டார்கள். ஜாப்னாஉவிக்க் [illegible] [illegible] வைத்தியர்களும் நாமேோம [illegible] [illegible] இவர்களுடைய அபிப்பிராயங்களை [illegible] சிலருடைய அபிப்பிராயங்கட்காக தாமதிக்கிறோம். ப-ர்.

## பெண்கள், பாலர் பாகம்.

:0:

### தேகபரிபாலனம்.

(தொடர்)

ஆகாரத்தின் அளவு.

20. ஆகாரத்தின் அளவு, ஆகாரத்தின் தன்மை யம்போலவே ... ருடைய வயது, தொழில், பழக்கங்களையும் ஒட்டியிருக்கும்.

வயது—இளங் குழந்தைகளுக்கு ஆகாரஞ் சிறிது போதுமானது. அவைகள் வளருந்தோறும் அவ்வ வளர்ச்சிக்குத் தக்கபடி ஆகார அளவும் மிகுந்துவர வேண்டுவது அவசியமாகும். வயதுசென்று தளர்பருவமாகிய மூப்புக் காலத்திலே ஆகாரம் அளவிற் குறைந்து வரும்.

தொழில்—தேகத்தால் ஒறுக்கும் வேலைசெய்ப வர்கட்கு ஆகாரம் அதிகம் வேண்டும். போதிய சரீர முயற்சியின்றி மனோ முயற்சிமாத்திரம் உடையவர்கள் அற்ப போஜனமே செய்வார்கள்.

பழக்கம்—வழக்கமாக அதிக போஜனம் பண்ணுகிறவர்கள் ... போஷணை சக்தியையுடைய மாமிசம், பால், கோதுமை முதலான வஸ்துக்கள் குறைந்தால் திருப்தி அடைவார்கள். அதிக போஜனம் செய்பவர்களுடைய இரைப்பை மிகவும் பருத்துவிடுகின்றது. ஆதலால், குறைந்தபோஜனம் திருப்திதராது.

ஆகாரத்தின் சுபாவம்.

21. மாமிசத்தில் சரீரபோஷணஹேதுவாகிய "லவணவாயு" அதிகரித்திருப்பதால் அதனைக் குறைத்து உண்ணல்வேண்டும். தாவரவஸ்துக்களில் போஜனம் ... குறைவாகையால் அவைகளை அதிகமாகச் சாப்பிடவேண்டியிருக்கின்றது. ஒருவகைப் பதார்த்தத்தையே உண்பதால், சரீரபோஷணம் உண்டாகாது. பாலில் போஷணசக்தி அதிகம் உண்டு. ஆயினும் அதனையே அடுத்தடுத்து உண்பது, அதன்மேல் மிகவும் வெறுப்பை உண்டாக்கும். ஆகையால் எப்பொழுதும் நாம் உட்கொள்ளும் ஆகார பல பதார்த்தங்கள் கலந்துள்ளதாயிருக்கவேண்டும். தினமும் உண்ணும் உணவு போஜனகாலந்தோறும் மாறிமாறி வருமாயின் ருசியும், தேகசுகமும் உண்டாகும். ... காவற்கூடம் சிறைச்சாலைகளிலும், தொழி... லும் காட்டடச் சிலிப்பவர்களுடைய ஆகா... குறைவுக்குக் காரணம் அவர்கள் எப்பொ... வித உணவையே உண்டுவருவதனால் என் ... த்தியர் ...

... அற்பபோஜன ...

22 ... அற்பபோஜ...

இரண்டு ... க்குத ...

உண்டா ... ஜனத்த ...

க்குக் கெ ... சீரணம் உ...

வுக்குமி ... சகல வ...

கெட்டுப் ... அதிக ...

சோவு, ... உ...

சரீரத்துக்குச் சுபாதீனமின்மையும் ...

வும் உண்டாகின்றன. இதுபோலவே, அற்பபோஜனத்தால் சகல அவயவங்கட்கும் வேண்டுமளவுக்குள்ள பலமில்லாமையால் ... சரீரம் மிகவும் இளைத்துவிடுகின்றது. ... நிலையில்லாதிருப்பதும் அற்பபோஜனத்தாலுண்டாகும் கெடுதிகளுள் ஒன்றே.

தாவரவஸ்துக்கள்.

23. தாவரவஸ்துக்களில் கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய் இவைகட்குப் போஷணை சக்தி அதிகம் உண்டு. வெள்ளரிக்காய், பூசினிக்காய் முதலானவைகட்குப் போஷணை சக்தி சிறிதேனும் இல்லை. வாழைக்காய் மிகவும் உபயோகமான பதார்த்தம். இதற்குப் போஷணைசக்தி அவ்வளவு அதிகம் இல்லாவிடினும், இரும்பு, பதும் முதலானவை அடங்கியிருக்கின்றன.

வாதுமை, முந்திரி இவைகளின் பருப்பில் போஷணைசக்தி அதிகம் காணப்படுகின்றது.

கிழங்குவகைகளுள் சேனை என்னும் காராக்கருணை, கருணைக்கிழங்கு உருளைக்கிழங்கு இவைகள் மிகவுங் குணமுடையவைகள். கருணைக்கிழங்கு ... சாந்தி செய்யும் சக்தியுள்ளது. உருளைக்கிழங்கு மிகவும் போஷணசக்தியை உண்டாக்கவல்ல ... வானாலும் அதிக சேதமுள்ள பூமியிலே தான் உண்டாகும். ஐரோப்பாவில் இது மிகவும் அதிகமாக உபயோகப்படுகின்றது. அயர்லாண்டில் பெரும்பாலாரு இதனாலேயே சீவிக்கிறார்கள். நமது தேசத்துக் கிழங்குகளில் இவ்வுருளைக்கிழங்குக்குச் சாமீபமுள்ள மரவள்ளிக்கிழங்கு இது அமரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டது. (தொடரும்)

## வர்த்தமானம்.

ஏம ஏசண்டர்— வடமாகாண ஏசண்டர் மெல்-ரோஷ் பரோ துரையவர்கள் மன்னார்பகுதிக்குச் சுற்றோட்டத்திற் சென்றிருக்கின்றார் வருகிறமாச முற்கூற்றிலே யாழ்ப்பாணந் திரும்புவாராம்.

பூமியதிர்ச்சி—இலங்கைக் கரைக்கு 300 மைல் தூரத்திலே ஓர் பூகம்பம் நடந்ததாகச் சென்ற 12 உ கொழும்புச் சோதிடோப்பரிகை காட்டிற்றும்.

இலங்கை அரசின் புதுவருஷச் செலவு— இலங்கை அரசின் அடுத்தவருஷச் செலவுக்கு 54711839 ரூபாய் மதிக்கின்றது. வருஷம் 1915 ஆ ஐப்பசி மீ 1 உ தொடக்கம் ...

அதிகமாக நல புரட்டாதி மாசம 31 உ வரைக்கும் நடைபெற ...

ற்கு அதிகமாக நித்திரை செய்பவருக்கு ...

ரை எப்போதும் தீங்கையே ...

தவர்களுக்கும் அதிகம் மூளை ...

ம் பகலில் அரைமணி நேரநித் ...

செய்யாது சிலவேளை நன்மை ...

வேலை செய்வது தேகப் ...

லுபாவது மட்டாக விருக்கவே ...

லை செய்தாலும் வேலையில்லா ...

ரோயுண்டாய் ஆயுள் குறையு ...

ஈராவி யந்திரத்தைத் த...

ண்ணி எண்ணை முதலியன வி...

து தேகத்தையும் சுத்தம் பண்...

விருந்து கழியும் அழுக்குகள் ...

வேண்டும்.

Pr...

... வரும் ஆசௌசப ...

... எவ்வளவுகால எல்லைவரையும் ...

... தைத் தெளிவாக வரையறுத்துக்கூறுவ...

சுலோகமும் தமிழுரையும் ... ...

சிராத்தவிதி வசனமாக ... ...

மானேஜர்,

ஸ்ரீ பாஸ்கரயந்திர...

யாழ்ப்பாண...

Vannarponni Post, ( JA...

பிரசுரமாகும்

# பாலபாஸ்கரன்

**BALABHASKARA.**

## சுகாதார விஷயம்.

### சமதா தேகம்.

(தொடர்.)

நாம் சாப்பிடும் பானங்களுள் தேயிலை காப்பிகள் அவளவு தேகசுகத்துக் குரியவைகளல்ல அவைகளை நிறுத்திவிடுதல் நல்லது, அப்படியல்லாவிடில் மிகவும் மட்டாகப் பாவிக்கவேண்டும்.

மேற்படி சீரண யந்திரத்திற்குச் சரி விறகுக்குப் பதலாக கல் மக்கி மணல் முதலின பாவிக்கதால் எப்படி உபயோகமில்லாது போகுமோ அப்படியே சில சாப்பாடுகள் உபயோகமற்றனவாக விருப்பதுந் தவிர, தீங்கை விளைக்கக் கூடியனவாகவும் இருக்கின்றன மாமிசாதி போசனங்கள் எங்கள் தேகத்தை வளர்ப்பதற்கு வேண்டப்படுவனவல்ல. அதுவுமன்றித் தீங்கையே செய்வனவாம் அவை மிருகத்தன்மையை அதிகரிக்கச் செய்வதுமன்றி சிரங்கு, சொறி, குஷ்டம், முதலிய ரோகங்களையும் உண்டாக்குகின்றன. முறிவு, அறிவு, வெட்டுக்காயங்கள், சீக்கிரத்தில் மாமிச போசனஞ் செய்பவனுக்கு ஆறமாட்டாது காச்சல் வந்தால் மிக அதிக வலியோடு வருகின்றது சீரண மாவதற்கு அதிகமாகக் கருவிகளைக் களைக்கப் பண்ணுகிறது ஆதலால் காய்கறி பதார்த்தங்களே விசேஷமானவை.

சீரணயந்திரத்தை ஒருநாள் வேலை செய்தவுடன் இன்னொருநாள் ஆறவிடுகிறார்கள் அதுபோலவே நமக்கு நித்திரையாகிய ஆறுதலும் மிகப் பிரதானமானது சுக தேகிகளுக்கு நித்திரை அதிகம் வேண்டியதில்லை இரவு பத்துமணிக்குமேல் காலை ஐந்துமணி வரையே அதிகமாக முயற்சியுள்ளவர்கள் உறங்குகிறார்கள் அதற்கு அதிகமாக நித்திரை வேண்டியதில்லை பகல் நித்திரை எப்போதும் தீங்கையே செய்வது. ஆயின் இளைத்தவர்களுக்கும் அதிகம மூளை வேலை செய்பவர்களுக்கும் பகலில் அரைமணி நேரநித்திரை அவளவு தீங்கைச் செய்யாது சிலவேளை நன்மையும் செய்யும்,

வேலை செய்வது தேகப்பியாசமாவது மூளை வேலையாவது மட்டாக விருக்கவேண்டும். அதிகமாக வேலை செய்தாலும் வேலையில்லா திருந்தாலும் தேகத்தில் நோயுண்டாய் ஆயுள் குறையும்.

சீரண யந்திரத்தைத் தண்ணீர் விட்டுச் சுத்தம் பண்ணி எண்ணை முதலியன விட்டு வைப்பதுபோல நமது தேகத்தையும் சுத்தம் பண்ணவேண்டும். தேகத்திலிருந்து கழியும் அழுக்குகள் சுத்தப் படுத்தப் படல் வேண்டும்.

(வரும்)

## ஜாதக பாஸ்கரன்.

இப்புத்தகம் சோதிடருடைய உதவியில்லாமல் சாதகங்களின் துவாதசபாவபலன்களும் அஷ்டவர்க்க சர்வர்க்க கணித நிர்ணயங்களும், 9 கிரகங்களும் 12 ராசிகளிலே சஞ்சரிக்கலால் வரும் (108) விதஸ்தான பலன்களும், ராசிப்பலன் நட்சத்திராதிபலன்களும், மகாதெசாபுத்தி விதபலன்களும், சந்திர மூதலியனவும், சர்வயோகங்களுமுள்ள பல ராஜயோகங்களும் இன்னும் ஜாதகர்களுக்குரிய பலவும் அமைந்திருத்தலோடு எவர்களும் சாதாரணமாக ஜாதகம் கணிக்கவும், ஜாதகபலனை அறியவும் சுலபவிதமாக (சமஸ்கிருதம் தமிழ் என்னும் இரு பாஷைகளிலுமிருந்த) தமிழிலே வசனரூபமாக எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்திலே நவக்கிரகங்களைக் கணிப்பதற்குரிய கணித விதிகளும், அநுபவத்துக்காக இருஷிகள் அரசர்கள் விசேஷ உத்தியோகஸ்தர் முதலிய பலருடைய ஜாதகங்களும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆதலால் இப்புத்தகம் யாவரிடத்திலும் இருக்கவேண்டியது.

விலை ரூ 3-50.

விதானமாலை என்னும்

## சோதிடப்புத்தகம் (உரையுடன்)

இதிலே அநேக விஷயங்கள் எவர்களுக்கும் தெளிவாக விளங்கும்படியுள்ள விரிவுரையுடன் விலை ரூ. 1-25.

## செகராஜசேகரம் (உரையுடன்)

யாழ்ப்பாணத்து (முன்) அரசரும் சிறந்த வித்துவானுமாகிய அரசராலே இயற்றுவிக்கப்பட்ட சோதிடநூல் யாழ்ப்பாணச் சரித்திரத்துடன் ... விலை சதம் 75.

## மனை நூல்.

மனை வகுத்தற்குரிய 16 பொருத்தங்களும், மனைவகுக்கவேண்டிய விதங்களும், அதற்குரிய நாளாதியனவும் எவர்களும் அறியும் விதமாக வசனரூபமாக உள்ளது.

விலை சதம் 25.

## அகபஞ்சஷஷ்டி.

செனனமரணத்தால் வரும் ஆசௌசம் இன்னார் இன்னாருக்கு எவ்வளவுகால எல்லைவரையும் இருக்குமென்பதைத் தெளிவாக வரையறுத்துக்கூறுவது. சமஸ்கிருத சுலோகமும் தமிழுரையும் ... ... விலை சதம் 50.

சிராத்தவிதி வசனமாக ... ... விலை சதம் 12.

மனேஜர்,
ஸ்ரீ பாஸ்கரயந்திரசாலை,
யாழ்ப்பாணம்,
Vannarponni Post, (JAFFNA.)

*Printed and published by V. S. Sripaty at the Sribhaskarapress Jaffna*

# இலங்கை இந்தியன்.

1928-ஞ அக்டோபர் மீ 24உ

## இந்தியரின் வாக்குரிமை பிரச்னை. —1

—0—

நிகழும் சட்டசபைக் கூட்டத்தில் விவாதத்திற்கு வரவிருக்கும் விஷயங்களில் வாக்குரிமை சுதந்திரம் என்பதும் ஓர் முக்கியமான விஷயமாகும். இது பொதுப்படையாக இத்தீவின் ஜனசமூகத்தினரையும் முக்கியமாக இந்நாட்டில் குடியேறி வாழ்ந்து வரும் 820,000 இந்தியர்களையும் பாதிக்கக்கூடிய ஓர் முக்கியமான பிரச்னையென்பதை எவராலும் மறுக்கமுடியாது. இவ்விஷயமாக இந்தியர்கள் சம்பந்தப்பட்டவரை இலங்கையினர் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை நாம் பலதடவைகளில் வெளியிட்டிருப்பதை நமது நேயர்களுக்கு ஞாபகமூட்டவிரும்புகிறோம். அவரது அபிப்பிராயங்கள் நாளுக்குநாள் வலுத்துக் கொண்டே வருகிறது. இலங்கைப் பொதுமக்களின் ஆதரவுகளைப்பெற்ற பலதேசீய சபைகளும் சங்கங்களும் சென்ற சிலமாதங்களுக்குள் பலகூட்டங்கள் கூடி பலவாறாகப் பேசியும் பொறுப்பற்ற தீர்மானங்கள் ஏதோ சிலவற்றை நிறைவேற்றியுமிருக்கின்றன. இலங்கையின் எதிர்காலவாழ்வு தங்கள் கையிலேயே அகப்பட்டிருப்பதாக நினைத்து மனம்போனவாறெல்லாம் பேசவும் சிலபொறுப்பற்ற மேதாவிகள் தலைப்பட்டு விட்டார்கள். தாங்கள் செய்யும் தாந்தோன்றிச்செயல்களும் ஆலோசனையின்றிப் பேசும் பிரசங்கங்களும் சற்றாவது நியாயத்தையொட்டியிருக்கிறதா என்பதை இவர்களில் ஒருவரேனும் சிந்திக்கத் தயாரில்லை. எங்ஙனமாயினும், இலங்கைவாழ் இந்தியன் தற்பொழுது மிகமிக நெருக்கடியான நிலைமையிலிருந்து வருகிறான் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே, பொதுஜன அபிப்பிராயமின்னதென்றும் நிலைமையின் வரலாறு எவ்விதமிருந்து வருகிறதென்றும் சற்று ஆராய்தல் நலமெனக்கருதி அவ்வாறு செய்யத்துணிகின்றோம்.

மாகாணப்பிரிவினைத் தேர்தலில் வாக்குரிமைபெற இலங்கையரல்லாத ஒவ்வொருவரும் இடைவிடாது ஐந்துவருஷக்காலம் இலங்கையில் வசித்திருக்க வேண்டுமெனக் கமிஷனர்கள் நிபந்தனை யேற்படுத்தியிருக்கின்றார்கள். இவ்வித நிபந்தனைக்குட்பட்ட இந்தியர்களுக்கும் வாக்குரிமைகிடைக்கக்கூடும் என்பதை உணர்ந்து இலங்கையர்களும் முக்கியமாக சிங்களவர்களும் மனம் பொறுக்காமல் குழப்பத்துக்கு ஆளாகின்றனர். இந்நாட்டிலிருக்கும் இந்தியர்களின் தொகை 8½ லெக்ஷமாக விருந்தபோதிலும் குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து வாக்குரிமை கிடைக்க சாதனம் ஏற்படுவது மிகமிகச் சிலருக்கேயென பன்முறை கூறியிருக்கிறோம்.

இலங்கையின் பொருளாதார உயர்விற்கு இந்தியத் தொழிலாளியே முக்கியகாரணமாகவிருக்கிறான் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. காலித் தோட்டக்காரர் சங்கத்தலைவர் காலியில் சின்னாட்களுக்குமுன் நிகழ்த்தியுள்ள பிரசங்கத்தில் இந்தியத் தொழிலாளிகளைப்பற்றி கூறியுள்ளதும் இதையே குறிப்பிடுகின்றது. இலங்கைத் தொழிலாளி பொறுப்பாக அமர்ந்து வேலைசெய்ய திறமையற்றவனென்றும் இந்தியத் தொழிலாளியில்லையானால் இலங்கைத் தோட்டங்களின் கதி மிகவும் கஷ்டமானதாக மாறிவிடுமென்றும் அவர் சொல்லியுள்ளதை நாம்முற்றிலும் அங்கீகரிக்கிறோம். முதலாளிகள் அவசியப்படுவது வேலையில் திறனும் பணிவான புத்தியுமுள்ள தொழிலாளரே யென்பதை இலங்கைத் தமிழராவது சிங்களவராவது உணர்ந்து கொள்ளவில்லையென்று "இண்டிபெண்டென்ட்" பத்திரிகை சிலதினங்களுக்குமுன் வரைந்துள்ளதும் உண்மையெனவே சொல்லலாம். ஆனால் இங்ஙனம் நாட்டின் பொருளாதார நிலைமைக்கு மிகவும் இன்றியமையாததாயுள்ள இத்தகையோருக்குராஜீய விஷயங்களில் சுதந்திரவுரிமைகள் அளிக்கும் விஷயத்தில் இலங்கைப் பொதுமக்களின் அபிப்பிராயம்மாறுபாடாகவிருப்பதுமிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். இதைப்பற்றி இன்னும் விரிவாக அடுத்தமுறை ஆராய்வோம்.

## ஊவா இந்தியசங்கம்.

ஊவா இந்திய சங்கத்தின் பொதுக்கூட்டம் சென்ற அக்டோபர் மாதம் 14-ந் தேதி ஸ்ரீ R. T. M. செல்லசாமி அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கூடியது. அநேகம்பேர் சமுகமளித்திருந்தனர். வெளிமடையிலுள்ள மிஸ்டர் N. S. போல் அவர்களும், நுவரெலியாவிலுள்ள மிஸ்டர் L. K. ராமலிங்கமவர்களும் வரமுடியாததினால் செய்தியை தெருவிக்க தந்தியனுப்பியிருந்தார்கள்.

காரியதரிசி கொலோனியல் செக்ரட்டரியிடமிருந்து வந்தலெட்டர் வாசிக்கப்பட சபையார் அங்கீகரித்தார்கள்.

### கைகுத்தல்.

பின் காரியதரிசி, நாவலப்பிட்டியிலுள்ள மிஸ்டர் B. S. ஹஸன் மொஹிதீன், இலங்கை கவர்ன்மெண்டாருக்கு, இலங்கையிலும் இந்தியாவிலும் கைகுத்துதலிருப்பதினால் இரண்டாந்தரம் கைகுத்துவது அவசியமில்லையென்று எழுதியகடிதத்திற்கு கொலோனியல் செக்ரட்டரி எழுதியபதில்வாசிக்கப்பட்டு அங்கீகாரம் செய்யப்பட்டது.

### சங்கத்தின் ஒழுங்குகள்.

காரியதரிசி ஒழுங்குகளை (rules) ஒவ்வொன்றாக வாசிக்க, அவைகளிற்சில, திருத்தத்தோடு ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டன.

முதலாவதாக ஸ்ரீ. வி. ஞானபண்டிதன் அவர்கள் நிலக்கமிஷன் (Land Commission) இடையிலே வெளியிட்டபிரேரணையைக்கண்டித்து கொண்டுவந்த தீர்மானம்மிஸ்டர் J. N. ராஜு ஆமோதிக்க ஏகமனதாய் நிறைவேறியது.

மிஸ்டர் பி. எஸ். வயித்திலிங்கம் தன்னுடைய பிரேரணையைக் கொண்டுவந்தார். பிரேரணையாவது "இந்தச்சங்கம் கொழும்பிலே இந்தியர்களுக்கென்று பிறிதொரு தொழிலாளர் சங்கம் கூட்டுவதைக் கண்டிக்கிறது. இதுஇப்படிக் கூட்டுவது சிலகுறிப்பிட்டவர்களால் முக்கியமாக தங்களுடைய நன்மைக்காகவே கூட்டுகிறார்களாதலால் அவர்களுடைய செய்கையால் இலங்கையருக்கும் இந்தியர்களுக்கிடையில் மன விரோதத்தை உண்டாக்கிவிட்டார்கள்." இந்தப்பிரேரணையைக்கொண்டு வரும்போது அவர் சொன்னதாவது:— கொழும்பிலுள்ள முக்கியமானவர்கள் இப்பொழுது இருக்கும் தொழிலாளர் சங்கத்தில் பிளவு உண்டாக்கக்கூடாதென்றும், அப்படிசெய்பவர்கள் இந்தஊரிலே தங்குவதற்காக சுயநலங்கருதியே செய்கிறார்கள். "மேலும் அவர் பேசியதாவது, "இந்தியத் தொழிலாளருக்கும்இலங்கைத்தொழிலாளருக்குமிடையில் ஒருசச்சரவாவது நடக்கவில்லையென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகிறது. நெருக்கடியான காலங்களிலும் தொழிலாளர் சங்கஅக்கிராசனர் மிகவும்நன்றாகவே நடந்துகொண்டாராதலால் இலங்கையர்களும்இந்தியர்களும்ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் சமாதானமாகவும் சகோதரபான்மையாகவும்ம் ஒருசச்சரவுக்கு இடங்கொடாமல் நடந்துகொள்ள வேண்டும்." என்றுசொல்லிமுடித்தார்.

மிஸ்டர் தக்ஷிணாமூர்த்தி அவர்கள்கொண்டுவந்த பிரேரணையைஆமோதித்து பேசியதாவது:— இந்தியத் தொழிலாளருக்கு எதிராக காங்கிரஸில் பேசியதை மிஸ்டர் குணசிங்கம் ஒத்துக்கொண்ட போதிலும், அச்சொற்கள் இந்தியருடைய மனதைப் புண்படுத்தி யிருந்தாலும் அவர்தான்சொன்னவற்றிற்குப் பச்சாத்தாபப் படுவதாகவும் மன்னிக்கும் படியாகவும் கேட்டுக் கொண்டார். யாரொருவன் தான் செய்தகுற்றத்திற்குப் பச்சாத்தாபப்படுகிறானோ அவனை மன்னிக்கவேண்டியதவசியமே. இன்னொருமுறை பார்ப்போம. இனிமேலும் அப்படிநடப்பாரானால் தொழிலாளர் சங்கத்தைத்திருத்தியமைப்பதே யல்லாமல் அதைப்பிரித்து நடத்துவது கூடாது. ஆனதினால் தொழிலாளர் சங்கத்தை பிரிப்பது அவசியமேயில்லையென்றும், அப்படிப் பிரிப்பது தொழில் உலகப்பொதுவிதிக்கு (universal principle) மாறானதென்றும் அப்படி ஒவ்வொரு ஜாதியாருக்கும் பிரத்தியேக தொழிலாளர் சங்கம் ஸ்தாபிப்பது ஒருவிதநன்மையும் செய்யமாட்டாதென்றும் தொழிலாளர் நிறம், ஜாதி, மதம்முதலியவை ஒன்றையும் பாராட்டாது ஒற்றுமையுடனுழைக்க வேண்டுமென்றும் பிளவுபட்டால் ஜாதிமத விஷயமாக கெட்டஎண்ணம் தோற்றுமென்றும் சொல்லிமுடித்தார்.

ஸ்ரீ ஞானபண்டிதன் அவர்களும் ஏ. எம். எம். சுல்தான் அவர்களும் தேவதாஸ் அவர்களும் பிரேரணையை எதிர்த்து வாதித்தார்கள். ஸ்ரீ ஞானபண்டிதனவர்கள் எதிர்வாதம் செய்யும்போது, இப்படிப்பட்ட பிரேரணை கொண்டுவருதல் இச்சங்கத்திற்கு ஒழுங்கானதில்லையென்றும் இந்தியர்களின் பாதுகாப்புக்காக பிறிதொரு சங்கம் ஸ்தாபித்தல அவசியமென்றும் சொன்னார். மிஸ்டர் வி. ராமனாதன் பிரேரணையை ஆமோதித்து இருக்கும் நிலைமையைவிளக்கிப்பேசினார். அவர்பேசியதாவது:— ஒருசங்கத்தை ஆரம்பிப்பது எளிதானகாரியம். ஆனால் அதைக் கொண்டுநடத்துவது கஷ்டம் தான் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே ஒவ்வொருவரும் ஊன்றி ஆலோசனை பண்ண வேண்டும். மேலும் இலங்கைத் தொழிலாளர் சங்கத்தின் நடவடிக்கைகளில் ஒருவித தொந்தரவாவது பாதியாவது இல்லை. சொன்னார் இப்பொழுதுகொழும்பில் தொழிலாளர் சங்கத்திற்கு எதிராக நடப்பவையெல்லாவற்றிற்கும் காரணம்சிலசுயநலங்கருதியவர்களே. என்றுபேசிமுடித்தார். அநேகர்பிரேரணையை ஆமோதித்துப் பேசியபின் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 35 பேர்சாதகமாகவும், 19 பேர் பாதகமாகவும் ஓட்டுக் கொடுத்தார்கள். பிரேரணையை எதிர்த்த ஞானபண்டிதன் அவர்கள் பிரேரணை நிறைவேறியதும் வெளியிற் போய்விட்டார்.

மிஸ்டர் ஜோசப்பெரிஸ்பின்தீர்மானமொன்று கொண்டுவந்தார். அவர் பேசியதாவது:— ஒரு லாயர்இந்தியருக்கு எதிராக பகிரங்கக் கூட்டங்களில் பேசியவர் சென்ற லோக்கல் போர்ட் தேர்தலுக்கு இந்தியரின் ஆதரவையே பெற்றிருக்கின்றாரென்றும் இனிமேல் அவர் லோக்கல் போர்ட் எலக்ஷனுக்கு வருவாரேயானால் அவரை ஆதரிக்கக்கூடாதென்று ஊவாவிலே, பதுளை என்னுமிடங்களில்கூடிய பொதுக் கூட்டங்களில் இந்தியர்களுக்கு அதிகம் தெரிந்தவரான இவர்பேசியது இந்தியர்களுடைய மனதை புண்படுத்துகிறதென்றும் அவர்தான் செய்த குற்றங்களை தெரிந்து கொள்ளச்செய்ய வேண்டுமென்றும் சொன்னார். மேலும் அவர் லோக்கல் போர்ட் எலக்ஷனுக்கு வருவாரேயானால் இந்நகரிலுள்ள இந்தியரும், மாகாணத்திலுள்ள இந்தியரும் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் சொல்லிகொண்டார்.

மிஸ்டர் எஸ். என். சின்னையா அவர்கள் பிரேரணையை ஆமோதிக்கையில், எலக்ஷனுக்கு வந்தபோது எப்படி இந்தியரை புகழ்ந்தாரென்றும் இப்போது தாழ்த்திப் பேசுவது வெட்கத்துக்கும் நன்றியீனத்துக்கும் இடமென்றும் சொன்னார். மெஸெர்ஸ் டௌஸனும் அமிர்தலிங்கமும் ஆமோதித்தனர்.

மிஸ்டர் எஸ். ஜெ. வைலாஸ் அவர்கள் உபஅக்கிராசனராகத் தேர்தல் செய்யப்பட்டார்.

இவருப்பர்களுடனே கீழ்சொல்லப்பட்டவர்களும் கமிட்டி மெம்பர்களாகத்தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

பதுளை:—மெஸெர்ஸ் பி. எஸ். வைத்திலிங்கம், எஸ். தக்ஷிணாமூர்த்தி எம். எம். செயந் இப்ரும்ஷா. ஹப்புத்தளை:— மெஸர்ஸ் வி. அருணாசலம்பிள்ளை.

கொஸ்லந்தை:—ஸ்ரீ கறுப்பண்ணபிள்ளை. நமுனுகுல:— எம். எஸ். ராமசாமி அவர்கள், தெம்மதுரை மிஸ்டர் சின்னையாபிள்ளையும், லுணுகலைஅப்பாவுபிள்ளை அவர்களும், மிஸ்டர் எஸ். ஜெ. வைலாஸ்காகவும், காசிம் மொஹிதீனுக்காகவும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

இந்த சங்கத்தின் முன்னேற்றத்துக்கும் இது சரிவர நடத்தப் படுவதற்காகவும் ஒருநிர்வாக கமிட்டிக்கு விடப்பட வேண்டுமென்று சங்கம் முடிவுசெய்தது.

கடைசியாக அக்கிராசனர் அந்த மண்டபத்தில் அநேகர் சமுகமளித்தது சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றும், இனிமேலும் இப்படி ஊக்கம் எடுப்பார்களென்றும் ஸ்ரீ ஞானபண்டிதன் அவர்கள் வெளியே போனது துக்கத்தைக் கொடுக்கிறதென்றும் சொல்லிமுடிதார். அக்கிராசனருக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

## மத்திய மாகாண இந்திய சங்கம்.

### ஓர் வேண்டுகோள்.

—(0)—

சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மத்திய மாகாண இந்திய சங்கத்தின் தலைவர் ஸ்ரீமான் வீ. என். செலடியான் அவர்கள் கீழ்க்கண்ட அறிக்கையை பிரசுரம் செய்வதற்காக எமக்கு அனுப்பியுள்ளார்கள். நமது வாசகர்கள் அதனை ஊன்றிப் படிக்குமாறு வேண்டுகிறோம்:—

"எனது அன்பார்ந்த இந்திய சகோதர சகோதரிகளே!

இப்பூவுலகின் கண் பூர்வீகமுதல் கல்வியிலும் நாகரீகத்திலும், சிற்பம், வைத்தியம், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய சாஸ்திரங்களிலும், உலகுக்கே கிரீடம் போன்றிருந்தது நம் இந்தியா தேசமே என்பதை ஒப்புக்கொள்ளாதவர்களு முண்டோ.

இன்னுங்கூட சீர்வளம் நிலவளம் பொருந்திய நம் தேசமானாலும் அதன் குடிகளாகிய நம்மாலும் நன்மையடையாத ஜாதியுமுண்டோ? ஜனமுமுண்டோ?

ஆகிலும் இவ்விந்திய மக்களாகிய நம்மை பிறர் என்னவிதமாக நோக்குகிறார்கள் என்று ஆராய்ந்து பார்ப்போமெனில், நாமே வெட்கப்பட வேண்டியதாயிருக்கிறது.

இதன் காரணம் என்ன? ஏன் பிறர் நம்மை இழிவான நோக்கத்துடன் பார்க்கின்றனர்? என்று யோசித்தால்அக்குற்றம் நம்மைச சார்ந்ததாகவே யிருக்கிறது. எனெனில் நம்மக்கள் ஒற்றுமையை என்னவிதமாக நிலைநிறுத்தவேண்டும் என்று அறியாமலே இருக்கின்றார் இதற்கு முக்கிய காரணம்:— ஜாதி, மத தொழில் பேதமும், போதிய கல்வியின்மையுமே.

இவ்வித குறைகள் நம்மை விட்டகலாமல் குடிகொண்டிருக்கு மட்டிலும் நம்மை எவ்வளவு தாழ்ந்தநிலைமையில் வைத்தாலும் நமக்கு உணர்ச்சியிராது என்று பிறர் நினைக்க ஏதுவாகிறது.

இதுசமயத்தில் இலங்கையில் நிகழ்ந்து வரும் நிகழ்ச்சிகளை யோசிப்பீர்களேயானால் நான் சொல்வதின் உண்மை நன்கு புலப்படும்.

இலங்கை ராஜீய விஷயங்களைப் பற்றி விசாரணை செய்து, அதை என்னென்னவிதமாய் திருத்தியமைத்தல் நலம்என்று சிபார்சுகள் செய்ய, ஆங்கிலேய ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட அனுபோகம் நிறைந்த "டோனமோர் கமிஷனார்கள்" வெளிப்படுத்திய அறிக்கையில், ஜாதி, மத தொழில், கல்வி, நிறபேதமின்றி சகலரும் சட்டசபை ஸ்தானங்களுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குக் கொடுக்கும் உரிமையிருக்க வேண்டுமென்பது அவர்கள் செய்த சிபார்சுகளில் ஒன்று. இந்த அறிக்கையில் நம் இந்தியர்களுக்குப் பாதகமாக சில நிபந்தனைகள் இருக்கினும் சம உரிமை என்னும் அந்த ஒரு விஷயத்தை அவர்கள் சிபார்சு செய்ததற்காக நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆகிலும் டோனமோர் கமிஷனர்கள் செய்த இந்த சிபார்சானது, சில குறுகிய நோக்கமுள்ள இலங்கை சகோதரர்களுக்கு ஜாதி துவேஷத்தைக் கிளப்பி விட்டது.

(5-ம் பக்கம் பார்க்க)

## பாஹீரதி அல்லது பங்கய விலோசனி.

வித்வான் ஆர். எ. பிரம்மநாயகம் பிள்ளை அவர்களால் வரையப்பெற்றது

—()—

கடவுள் துதி நேரிசை வெண்பா

ஆதிமுதற் றெய்வமெனுமம்பலவா ஞானமணிச்
சோதி முதற் சங்கரனே தொல்லுலகில்—நீநிபெற
ஓதிய்பா கீரதியின்னுத்தம நற்கதையை
நீதமுட னோதவருள் நேர்ந்து

அத்தியாயம். 1

**காருண்ணியமுடைய கன்னிகை.**

அதிரமணீகரமாகிய சீதளகாந்தியுடன் உலகினரின்பநுகரும்பொருட்டு தமது பூரணவொளியைப் பரப்பி இப்பூங்காவிடையினின்றும் நிறைமதியே! இப்பொழுது பசுந்தென்றலுலாவும் வசந்தகாலமானபடியாலும், உடைது மலர்ச்சியாகிய வரவும்பாற்பவரை வருத்தவேண்டுமென இப்பொழிலிடத்திலங்கினுய் இங்கு சுகந்தபரிமளகந்தமானது தாமாகவே கமிழ்ந் தொழுகுந்தென்றல் எத்தகைய வீரரையும் அறிவுமயக்கச்செய்து பரவசப்படுத்திவிடும். அவற்றோடு நீயும் சேர்ந்தனையேல், இப்புடவிக்கி வருபவர்களை அனங்கனின் அரும்புமலர்ப் பாணத்தாலடிபடச் செய்து பல்வகைத் துன்புறுத்துவாயென எண்ணுகின்றேன். ஆகலால் உன் ஒளியைக்கரந்து விசும்பியினிடத்து செல்வாய் அல்லயேல் யான்பெரிதும் துன்பக்கடலிலாழ்க்தி வருந்துவேன். இப்பொழுது மாரனுனவன் கரும்புவில்லைத் தாங்கி என்போலிய சிறுவரைனைத்துழலும் பொருட்டுக் கங்கணதாரியாய் நிற்கின்றான். நீ அதற்கு துணையாய் நிற்பது அடாது. அதவுமுனது செயலுக்குத் தகுதியாகா. நீயோ அரன்சடையிருந்து இம்மாற்றம் செய்ய நினைந்திடில் மற்றவரென்செய்வார் யென்ற மொழியை தன்னந்தனியேசந்திரப்பிரகாச மயக்கத்திலும் தமதுவாழ்நாளில்அரும்பாடுபட்டு கல்விகற்பித்த மடந்தையை இழக்கநோகிற்கும் தருணத்தாலும் மெய்சோர்ந்தவளுகி தன்னையறியாத கண்ணீர்மல்கி தமதுமார்போடொழுகவிட்டவளுகிபிரக்ஞையற்று நெடுந்து யிலாயினள். சற்றுநேரமெல்லாம் அவ்விதமிருந்தமையால் மணியும் பதினென்றரையாகிவிட்டது. வீட்டினுள் சௌந்திரராஜுலுவைத் தேடிக்காணுது பொழிலிடத்திற்குவந்து பார்க்கும்போது பசுமையாகிய புல்த்தட்டில் கண்ணீர்வடிந்தவண்ணமே துயில்வதைக்கண்டதும் சாரதாநெடிதாராய்ந்து நம்மாலன்றோ நமது மைத்துனர் இவ்வித துன்பத்தை இரெண்டொருதினங்களாக நினைந்து நினைந்து கண்ணீர் விடுகின்றனர். எனது தந்தைக்கோ அறிவானது சிறிதளவுமில்லை. தாயானவள் அதிலும்கேடாகவன்றோ இருக்கின்றார். எமது ஆருயிர் மைத்துனரை அல்லும் பகலும் கவலையுறச்செய்த பாவிகளாகிய எனதன்னை தந்தையர்களை என்செய்வது. ஐயோ! பாவம் அத்தான். அத்தான் அத்தானென்னகைதட்டவும் சௌந்திர ராஜுலு எழுந்து— ஏது சாரதா இதுநேரம் தூங்கவில்லையா மணி எத்தனையடித்தது உங்களப்பா தூங்கிவிட்டாரோ? என்றனன். இதுகேட்டு சாரதா புன்முறுவலோடு என்ன இவ்வேரம் போதாதோ சாப்பாட்டிற்கு இன்னேரத்துக்குபின் யார் வந்து அழைக்கப் போகிறார்களென்று தூங்கினீர்கள். நமது வீட்டில் சின்னஞ்சிறுபிள்ளைகளிருந்தாலும் கூப்பிடும்படி சொல்லலாம். அதற்கு நம்வீடு பாக்கியமில்லாதுபோயிற்று. எனது தாய்தந்தையர்கள்நீங்கள் சாப்பிட்டீர்களோவென விரும்பிகேட்கப்போகிறார்களா? இல்லை. அப்படிபட்ட இடத்தில் சீக்கிரமாய் அதுவேலைகளை முடித்துக்கொள்வதல்லவோ திறமென்றனள். இதுகேட்ட சௌந்திர ராஜுலு பெரிதும் மனக்கலக்கமுற்றவனுய் சாரதா இனி எத்தனைநாளை உன்வீட்டுச்சாப்பாடு, 10 நாளோ 15 நாளோ தெரியாது இப்படிஇருக்க இன்றோடு ஞனுடாலும்சரி உண்ணுதிறந்தாலும் சரி. போ. போ. ஒருவேளை காலகண்டன்வந்தாலும் வருவான். அப்படிவந்தால்அறிவுகெட்ட முட்டாளானதால் முன்பின் யோசனையின்றி இரண்டற்ற வேலைசெய்யத் தலைப்படுவான். ஆனதினுல்சீக்கிரமாகப் போகால்வெளியே போகிறேன். தெருவாசக்கதவைதிறந்துவைத்துவிடு. இனிஉன் வீட்டிலும்மிதியேன் உன்வீட்டு சோறும்வேண்டாம் கடவுளாலின்றளவுதான் உன்வீட்டு ஆறுதலிருந்தது. இன்றோடு அதையும் மறந்துவிட்டேன். அதற்கு நீயென்செய்வாயென்ற வெப்பத்தை தமது உயிரினும் அரியசாரதாவுக்கு காட்டினுன். அதுகண்ட சாரதா மனம் பொறுதவளாகி, என் வருந்துகின்றீர் யெனதுயாக்கையானதை மற்றோர் தீண்டுதற்கு ஆசைவைத்திலேன். என்னைமணக்கவரும் ஆடவன் எனக்குத் தெரியாது எங்ஙனம் மணத்தல்கூடும் யானன்றோ மணத்திறகு இசையவேண்டும். எமதுதந்தைகாசாசை பிடித்தபேய் இப்போதிருக்கும் பொருளெல்லாம் அயலானுக்குக் கொடுத்து நாமெல்லோரு மவனுக்கடிமை சாரவேண்டுமென்ற மதிசிறிதேனுமில்லாத கிழட்டுப்பிணம். வாயில் வந்தபடி பெரிய பெரிய ஜெமீந்தார், மிராஸ்தார், மஜிஸ்திரேட்முதலான எத்தனையோபேர்கட்கு என்னைதருகிறதாக வாக்களித்திருக்கிறார். அறிவுகெட்ட தறுதலைக்கு நம்வீட்டில் நாமேவளர்த்த சுகுணவிலாச புத்தியுடைய சீமானிருக்க அயலாளைநாடும் பாமரனுகிய எந்தந்தையையான் அவமானப்படும்படி செய்வேன். இனி மகிழ்ச்சியோடிருமென பலவாறுதேற்றிசொன்னுள். அப்பொழுதே சௌந்திராஜுலுக்கு மனந்தெளிந்தது யெனினும் திடன்வரவில்லை. இவர்களிருவரும் பேசிமுடியுமுன்னே.

மீனலோசனி யானவள் அதிகோபத்தோடு அடியே. இதென்னடிமுண்டே இரவுபன்னீரெண்டுமணியாச்சுதே இரண்டுபேரும் கொல்லையிற்கொஞ்சிக்குலாவுகிறீர்களா சரி சரி உனது தந்தையைக் கூப்பிடுகிறேன் பார். அடியேமாடே உனக்கு கலியாணயினவு எடுக்கிறதிற்கு எல்லாம் பேசிமுடிந்தாகிவிட்டதே. நீஇப்படிவேசைத்தனமாய் திரிந்தால் உன்னையார் கெட்டுவார் நீ நினைத்ததுபலியாது. இவனுக்கு இருக்கஇடங்கிடையாது உண்ணச்சோறில்லாத கெட்டவன் வீட்டுக்கா போகவெண்ணுகிறாய் நீ என்னபடிப்பை படித்ததும் படிக்கப் படிக்கப்பரத்தையாகி விட்டனையே ஆனதினுலல்லவா நல்லவர் பெரியவர்கள் பெண்குழந்தைகளை கல்விபடிக்க அனுப்புவதில்லை. இவருக்கு வெளுத்ததெல்லாம் பால் என்றுப்போல் நினைத்திருக்கிறார். இப்படிபட்டதிருட்டு வேலைசெய்கிற இவ்வையா நீகட்டிக்கொள்ளப் போகிறாய். சீச்சீ மதிகெட்டவளே போ. வென்றதட்டினுள். அதுகேட்ட சாரதா ஒன்றும் சொல்லாது வீட்டிற்கு சென்றாள் அப்பொழுதே சௌந்திர ராஜுலு வீட்டைச்சேர்ந்த பூங்காவனத்தை விட்டேகி அடக்கமுடியாதகவையுடையனுவகியும் தமதுமாமியானவளின் சீற்றத்திற்காகவும் தனது பொருளிலாக் குறைக்காகவும்நினைந்து. நினைந்து. உருகி, அன்னடுநிசியே தமது உற்றநண்பனுகிய பூபாலகிருஷ்ணனது தெற்குவாசல் இராமசந்திரபுரத்திற்குச் சென்றான். அங்கு சென்று பூபால. பூபால என்றழைக்க நித்திரையிலிருந்து பூபால, கிருஷ்ணன் சௌந்திர ராஜுலுவின் சப்தமல்லவோ கேட்கின்றது யென்றே தனக்குள் நினைந்துக் கொண்டு சௌந்திராஜுலு வாகூப்பிடுகிற தென்றனன் ஆம். ஆம். கதவைத்திற.

பூபாலன் என்ன இன்னேரம் ஒருநாளுமில்லாத விசேஷமாய்இருக்கின்றதே. என்னகாரணம் என்றனன் சரி. சரி. கதவை

(5-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் வறுமை நிலைமை.

( முன் தொடர்ச்சி )

### வறுமையின் உண்மை.

சென்ற வியாசத்தில் இந்தியாவெங்கும் துன்பமே நிறைந்திருக்கின்றது என்றும் அதன்காரணம் ஆற்றொணு வறுமையேயென்றும் கூறப்பட்டது. ஆனுல் நமது ஜனங்களில் ஒரு வகுப்பார் வறுமைஇல்லை என்றுமறுப்பர். மற்றொரு வகுப்பார் வறுமை நிலைமையை ஒப்புக் கொண்டாலும் அதன் கொடுமைகளை நனகுணரார். இன்னொரு வகுப்பார் கொடுமைகளை உணர்ந்தாலும் அவைகளையும் அவைகளின் காரணமான வறுமையையும் நீக்கமுயலார். மனிதவாழ்வின் லட்சியமே இன்பம்; வேண்டுங்கால் வேண்டும்துன்பம் பிறவாமை என்பர் எல்லோரும். வறுமையைவிட கொடியதுன்பம் மண்ணுலகில் கிடையாது. ஆகையால் இத்தகைய துன்பத்துட் துன்பமாகிய வறுமையின் உண்மையையும், அதன் தன்மையையும் அதை ஒழிக்கவேண்டியதன் அவசியத்தையும் பன்முறை பகர்ந்தாலும் பழுதாகாது.

### வறுமை மறுக்கும் வாதம்.

நாட்டில் வறுமையில்லைஎன்று நாட்டவிரும்பும் நண்பர் நாடகங்கள், வினிமாக்கள், காப்பி ஓட்டல்கள், வெற்றிலைப் பாக்கு புகையிலைக்கடைகள், பீடி சிகரெட்டு ஷாப்புகள் , சென்ட் முதலியன நாளுக்கு நாள் அதிகரித்துவருவது வறுமையின் லட்சணமாகுமோ என்றுகேட்பர். முன்னளில் காலையில் பழையசாதம் சாப்பிட்டது போக இப்பொழுது பலகாரம் பட்சணம், ரொட்டி, பிஸ்கத், காப்பி, தேனீர் உபயோகிப்பதைக் கொண்டு வறுமையை மறுப்பர். பழையகாலத்தில் பல்துலக்க சாம்பல், கரிப்பொடி, குச்சி, உபயோகித்தோம். இப்பொழுது பல்பிசின், பல்பொடி, பல்புருஷ் உபயோகிக்கின்றோமே எனபர். முரட்டுக்கதர், பம்பாய் வஸ்திரம் நீக்கி மல்மல்லின் கிளாஸ்கோ, பட்டுமுதலியன உடுத்துவதையும் எடுத்துக்கூறுவர். மண்பாத்திர உபயோகம் குறைந்துவரவில்லையா என்றுவினவுவர். எங்குபோனுலும் பஸ்ஸிலும் ரயில் வண்டியிலும் போவதைச் சுட்டிக்காட்டுவர். இன்னும் இதுபோன்ற செல்வத்தின் வெளிச்சின்னங்கள் பல்வற்றையும் எடுத்துரைத்து வறுமையின் உண்மையை மறுப்பர்.

### வாதம்தவறு.

ஆனுல் அவர் வாதம் தவறு. பளபள என்று மின்னுவதெல்லாம் பசும்பொன்அன்று என்பதை மறந்துவிடுகின்றனர். மேற்கூறிய விஷயங்களெல்லாம் செல்வத்தின் சின்னங்கள் அல்ல. பட்டுடை தரித்தவனெல்லாம் பசியில்லாதவனென்று தீர்மானிக்க முடியுமா? ஆழ்ந்து நோக்குவோர்க்கு அனைத்திற்கும் பின்னுல் வறுமைகாட்டுவது நன்கு புலப்படும்.

மேற்கூறிய விஷயங்கள் நிகழும் இடங்களையும் அவை நிகழும் காரணங்களையும் அறிந்தால்அவை வெளித் தோற்றங்களேஎன்று அறிந்துகொள்ளலாம். அவைகளில் பெரும்பாலனவை பெரிய பட்டினங்களிலேயே காணப்படும். கிராம ஜனங்களிடம் காணமுடியாது. ஆனுல் இந்தியநாட்டின் ஜனங்களில் 100 க்கு 75 பேர்க்கு மேல்கிராமங்களிலேயே வசிக்கின்றனர். தவிர, தாங்கள் சௌகரியமாய் வாழ்வதை வைத்துப்பிறரும் சௌகரியமாகவே வாழ்வதாகத் தீர்மானிப்பது சிலர் அறியாமை. உற்றுநோக்குவோர்க்கேஉண்மை புலனுகும்.

### உண்மை நிலை என்ன?

உண்மை நிலைமையை இரண்டுவிதமாக விளக்கிக் கூறலாம். ஜனங்களின் தோற்றமும் தொழிலும் பழக்கவழக்கங்களும் ஜனங்களின் வறுமைநிலைமையை அறிவிக்கும். அதுபோல, வருஷந்தோறும் ஜனங்களுக்குக்கிடைக்கும் வருமானம், அதனுல் அவர்கள் அடையும் அத்யாவசியமான உணவு, உடைஉறைகள் முதலியவைகள் அளவு, அவைகள் மனிதனுடைய முழுவளர்ச்சிக்கும் அல்லது குறைந்தபட்சம் உயிர்வாழ்க்கைக்கு அத்யாவசியமாய் வேண்டியஅளவு முதலியவைகளும் ஜனங்களின் தரித்திரத்தை விளக்கிக்காட்டும்.

ஆண், பெண், குழந்தைகள் அனைவரையும் கவனித்துப் பாருங்கள். சாதாரணமாக டாக்டர்கள் மனிதரின் உயரம், கனம், பலம் எவ்வளவு இருக்கவேண்டுமென்று நிச்சயித்திருக்கிறார்களோ அவ்வளவில் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. மற்றநாடுகளில் காலுக்குகாலம் அவைகூடிவருவதாயும் நம் நாட்டில் குறைந்துவருவதாயும் அறிஞர் கூறுகின்றனர். அவர் கூற்றுஉண்மைதான் என்று யாவரும் கூறத்தடைஎன்ன? அங்ஙனம் உயரம், பலம், கனம்முதலிய குறைவதற்குள்ள முக்கியகாரணம் வறுமை என்பதில் சந்தேகமில்லை.

### ஜனங்களின் வருமானம்.

இந்தியாவிலுள்ள ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் சராசரியாகக் கிடைக்கும் வருமானம் என்ன? அதுவாழ்க்கை நடத்துவதற்கு போதுமானது தானு? என்பதைக்கவனிப்போம். அமெரிக்காவில் சராசரி வருமானம் நபர் 1–க்கு வருஷம் 1–க்கு72 பவுனும் இங்கிலாந்தில் 50 பவுனும் இந்தியாவில் 4 பவுன் அல்லது ரூபா 45 ஆகும். அதாவது மாதம் ஒன்றுக்கு ரூபா 3. அணு12; அதாவது நாள்ஒன்றுக்கு 2 அணு. இந்தக்குறைந்த தொகையில் மனிதன் உயிர் வாழமுடியுமா? இந்த2– அணுவிற்குள்ளாகவே உணவு, உடை, உறையுள் “நன்மை தீமைகள்,” நோய்க்கு மருந்துமுதலியனவெல்லாம் நடத்திக் கொள்ளவேண்டும். இதுசாத்தியமாஎன்று யோசித்துப்பாருங்கள். தவிர, சராசரி வருமானம் இரண்டணு என்றால் கோடிக்கணக்கான ஜனங்கள் ஒருபைசாகூட இல்லாமல் தவிக்கின்றனர் என்பது பொருள். நாட்டில் உற்பத்தியாகும் மொத்த வருமானத்தில் மூன்றில்ஒருபாகம் 100– ல் 5 ஜனங்களுக்குக் கிடைக்கின்றது என்றும் மற்றொருமூன்றில் ஒருபாகத்தை ஜனங்களில் மூன்றில் ஒரு பகுதியார் அனுபவிக்கின்றனர்என்றும், ஜனங்களில் மீதியுள்ள 100–க்கு 60 பேர்க்கு கிடைப்பது வருமானத்தில் மிஞ்சியுள்ள மூன்றில் ஒருபாகமே என்றும், அதனுல்ஏழைகளுக்குச் சராசரியாகத் தினசரி கிடைப்பது ஒரு அணுவென்றும் ஆசிரியர் ஷா என்பவர் கணிக்கின்றனர்.

ஆனுல் இங்கிலாந்திலோ சராசரிவருஷ வருமானம் நபர் 1–க்கு 50– பவுன். இவ்வளவு பெரியதொகை நல்வாழ்க்கைக்குப் போதாதென்று பிகோ, ராம்ஸே, மூர்போன்ற பிரபல ஆங்கிலப்பொருள் நூல்ஆசிரியர் வருந்துகின்றனர். அங்ஙனமாயின் இந்தியாவின் பரமதரித்திர நிலைமையின் தன்மையை இன்னும் விளக்கவேண்டுமோ?

### கிடைக்கும்உணவு எவ்வளவு?

இவ்வளவு சொற்ப வருவாயில் கிடைக்கும் உணவுமுதலியன எவ்வளவு? சராசரி இந்தியன் ஒருவனுக்கு தினசரிகிடைக்கும் உணவின்அளவு 1ராத்தல்என்றும், இங்கிலாந்தில்2ராத்தல்தானியமும் $\frac{1}{2}$ ராத்தல் மாம்சமும்என்றுகூறப்படுகிறது. ஆனுல்பார்ட்டிரிட்ஜ என்னும் சர்க்கார் டாக்டர் வெகுகாலத்திற்கு முன்னதாகவே ஒருமனிதனுக்கு குறைந்தபட்சம் தினந்தோறும் $1\frac{1}{4}$ ராத்தல் தான்யம், $\frac{3}{8}$ராத்தல்பருப்பு, $\frac{1}{8}$ ராத்த

(5-ம் பக்கம் பார்க்க)

# கோல்கேட் ஆக்ட்டகன் சோப்

மிகவும் உபயோகமானது.




## உலகப் பிரசித்திபெற்ற ஆக்ட்டகன் சோப்

வஸ்திரங்கள் சுத்திசெய்வதற்கும் மற்றும் வீட்டில் எப்பொழுதும் உபயோகிப்பதற்கும் மிகவும் அருமையானது.

## ஆக்ட்டகன் சோப்

எந்த ஜலத்திலும் உபயோகிக்க கூடியது. மிக மெல்லிய வஸ்திரங்களுக்கும் யாதொரு கெடுதியும்செய்யாது எந்த அழுக்கையும் மிக சுலபமாகப் போக்கக்கூடியது.

**மூன்று சிகப்புப்பட்டைகளுள்ள காகிதத்தில் சுத்தியிருக்கும் ஆக்ட்டகன்சோப்பைக்கவனித்து வாங்குங்கள்.**

அக்காகிதங்களை கவனமாய் சேர்த்து வையுங்கள். அவைக்குப் பதிலாக தக்க பரிசுகள் கிடைக்கும்.

விலையுயர்ந்த பரிசுவிபரங்கள் அடங்கிய நேர்த்தியான கேட்லாக் கேட்போருக்கு இனமாக அனுப்பப்படும்.

**ஆக்ட்டகன்கூப்பன்களை சேர்த்து வையுங்கள்**


சோல் ஏஜண்டுகள் :

**A. V. R. A. Adycappa Chetty,**
15, Sea Street, COLOMBO.

**A. M. Othuman Pillai,**
24, Keyser Street, COLOMBO



இது ஓர் புதிய மாதிரி *Ford* "போர்ட்" கார்



*Fordor Sedan*

காற்று காலங்களில் பிரயாணம் செய்ய மிகவும் ரக்ஷையாயுள்ளது.
காரின் ஹூட்டை திறந்து வைத்திருதால் மிகவும் குளிர்ச்சியை கொடுக்கும்.

**ஒவ்வொரு காருடனும் ஸ்திரமாகவிருக்கும் சாமான்களாவன:—**

5" டயர், ட்யூப், நாலுரோதைகளுக்குமுள்ள ப்ரேக்குகள், ஹைட்ராலிக் ஷொக் அப்ஸார்ப்ர், முன் பின்னுள்ள பம்பர்கள், ஸ்பீடாமீற்றர், நூல்லேட்டுகள், ஸ்டாக்லேட்டுகள், பெட்ரோல் கேஜ், அட்டோமாட்டிக் வின்ற்ஷீல்டு, வைப்பர் முதலியவைகளும் கொடுக்கப்படும்.

முழுவிவரங்களைப்பற்றியும், மாதாந்தம் சிறுத்தொகைப்பணம் கட்டி கார் வாங்கிக்கொள்வதற்கான ஏற்பாடுகளைப் பற்றியும் எழுதி விசாரித்துக்கொள்ளலாம்.

**பியேர்ஸ், லெஸ்லி அண்ட் கொம்பனி,**
பெயர்பீல்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ்
**கொழும்பு.**

பாஹீரதி அல்லது பங்கய விலோசனி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திறயென்றே வீட்டினுட்புகுந்த சௌந்திரராஜு அங்கு சென்றதுவும் தமது உற்றசண்டர்க்கு, நடக்கயாவற்றுங் கூறிமேல்நடக்கப்போவதுங்கூறி நாம் செய்ய வேண்டுவதென்ன? அதையோசித்து சொல். நாம் இனிமேல் சும்மாவிருந்தால் நமது முயற்சியின் பலன் அபலமாகிப்போம் இன்னம்நாள் 12 தானிருக்கிறது. சாரதாவின் கல்யாணத்திற்கு, அதற்கு முன் எப்படியாவது அந்தசாரதாவை. நாம் கொண்டு வராகிருக்கின் இது ஜென்மம் விழலாகும். அன்றியும் இன்னுனாக உடலுமுயருந் போலும் கண்ணும் மணியும் போலும் ஒருங்கிரிந்து உறவாடியும் ஒருவர்க்குவரும இன்பதுன்பத்தை இருவருமே பங்கு கொண்டு எப்பொழுது பார்த்தாலுமொரே மனதாகி னிக்குறி என்பது சிறிதளவும் இருவர் நேருக்கும் எக்காலமும் வந்ததே இல்லே. அவன் மகிழ்ந்தால்தான் மகிழ்தலும் நான்மகிழ்ந்தாலவன் மகிழ்தலும் பார்ப்பவர்கட்கு இருவரின் விளையாட்டையும் அன்பையும் கண்டு மெச்சுதலுமுடையதாக இன்னுனாய் நடந்துகொண்டோம்.

(இன்னும்வரும்)

இந்தியாவின் வறுமை நிலைமை.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ல்மாமிசம், 1/16 ராத்தல்நெய், ¼ ராத்தல்காய்கறி அத்யாவசியமென்று கணித்திருக்கின்றார். ஆனால், நம்மொவ்வொருவருக்கும் கிடைப்பது 1 ராத்தல்தான்யம்மட்டுமே. சாதாரண ஏழைகள் மற்றவைகளைக் கண்ணுலே காண்பதும் அரிது. அதனுலேயே ஸர் வில்லியம் ஹண்டர் இந்தியாவில் 4 கோடி ஜனங்கள் வருஷத்தில் ஒருவேளை கூட வயிறாரப்புசிக்க உணவின்றி வருந்துவதாக மொழிந்துள்ளார். அதனுலேயே இந்திய ஏழைகள் ஏதேனும் குற்றம்செய்து ஜயிலில் சிலகாலம் அடைபட்டுப்பின் வெளிவந்தல் முன்னிலும் பருமனும் பலமுடையவராயும் இருக்கின்றனர் என்று இர்வின் என்பவர் கூறினர். சு—மி

(தொடரும்)

மத்திய மாகாண இந்திய சங்கம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலாவதாக நம் இலங்கை சகோதரர்கள் நாம் யார்? நம் பூர்வீக தேசமெது? நம்முடைய மதம் உற்பத்தி எங்கே? நம்முடைய வேதங்கள் என்னபாஷையில் எழுதப்பட்டிருக்கிறது? ராக்ஷத பூமியாயிருந்த இவ்விலங்கை யாருடைய உழைப்பினுல்தான் னிலைமை யடைந்திருக்கிறது? நாம் நாளது தினத்திலுங் கூட உண்ணும் உணவும் எங்கிருந்து வருகிறதெனக் கவனியாமல் இந்தியர்களாகிய நாம் ஆகாது, நமக்கு ராஜீய விஷயங்களில் சம உரிமையாகாது, நம்மை இலங்கையைவிட்டு துரத்திவிட வேண்டும் என்று மேடைகளில் பிரசங்கம் செய்து வருவது அவர்களுடைய குறுகின நோக்கத்தைத் தெளிவாக்குகிறதல்லவா?

ஆகவே சகோதர சகோதரிகளே! நாமும் மானிட ஜென்மங்களே! நமக்கு இங்கு சகலவிதத்திலும் சம உரிமைக்குப் பாத்தியமுண்டு என்பதை எடுத்துக்காட்டி அதை நிலைநிறுத்த வேண்டும்.

இதே நோக்கத்தை மேற்கொண்டு, உழைப்பதுடன் மத்திய மாகாணத்திலுள்ள இந்திய மக்களின் முன்னேற்றத்தைக் கருதி பலதுறைகளிலும் உழைப்பதற்கென்றே மேற்கூறிய சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆகவே இந்த சங்கத்திற்கு ஒவ்வொரு இந்தியர்களையும், ஆண், பெண், ஜாதி மதம், தொழில் என்னும் பேதமின்றி, அங்கத்தினர்களாகச் சேர்த்து நமது சங்கத்தை ஆதரிக்கும் கடமை தங்களைச் சார்ந்ததாகவே இருக்கிறது.


சந்தா விபரம்.

| | |
|---|---|
| தொழிலாளிகளுக்கு வருட சந்தா சதம் | 25 |
| உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், கங்காணிமார்கள், முதலியவர்களுக்கு ரு | 1-50 |
| சகலருக்கும் ஆயுள் சந்தாவாக செலுத்த விரும்பும் உபகாரிகளுக்கு ... | 20-00 |


AMERICAN

EVEREADY

FLASHLICHTS & BATTERIES.



அமெரிக்கன்

எவர்ரெடி

தூரதிருஷ்டி காந்ததீபங்களும்


பாட்ரிகளும்

இந்த காந்தவிளககுகள் எல்லாவிடங்களிலும்

விற்கப்படுகின்றன.

எல்லா தினுசுகளிலும் அளவுகளிலும் கிடைக்கும்.

இரவுகாலங்களில் நீங்கள் எங்கே போக நேர்ந்தாலும் ஒரு அமெரிக்கன் எவர் ரெடி காந்தவிளக்கை எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் சௌகரியத்தை தரக்கூடியது. நம்பிக்கையானதும் எவ்வித ஆபத்தும் வாராதபடி பாதுகாக்கக் கூடியதுமான காந்த விளக்கு இதுவே.



எப்பொழுதும் உங்கள் காந்தவிளக்களுக்கு அமெரிக்காவில் தயார்செய்யப்பட்ட

'யூனிட்ஸெல்'லுகளேயே

உபயோகியுங்கள். அவைகள்தான் நீண்டகாலம் உழைக்கக்கூடியவை.

டாஜ் அண்ட் ஸெய்மூர் லிமிட்டெட்,


28, சத்தாம் வீதி, கோட்டை, கொழும்பு



DODGE & SEYMOUR Ltd,

28, CHATHAM STREET, FORT

COLOMBO.



"பீபீ" (குழந்தை)

மார்க்பால்

முதல்தரமானது.

ஆடை நிறைந்தது

சுத்தி செய்த சர்க்கரை

சேர்க்கப் பட்டது.

"பீபீ" பால்

குழந்தைகளுக்கு உகந்த ஆகாரம். புளிப்பு ஏறாது. குழந்தைகளுக்கு சுலபமாய் ஜீரணமாகும். பால்டின் வாங்கும் போது மேலே கண்டகுழந்தை மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.





A. V. R. A. Adycappa Chetty

COLOMBO. (C.I.

"ஆர்கையில்

துவிசக்கிர (சைக்கிள்) வண்டிக



இலங்கையில் மிக குறை

விலைரூபாய் 85-00

சிறு தொகை பணம் கட்டி கள் வாங்குவதற்கான ஏற் செய்கிறோம்.

HOAR

& CO (ENGINEERS) L

தபால் பெட்டி நெ. 2

கொழும்பு.

ஆர்டர் கொடுப்பவர்கள் இப் யை குறிக்கவும்.

எல்லாதாய்மார்களுக்கும்

சிறந்த புத்திமதி இதுவே

நீங்கள் பிரசவித்த பின் பலமற்றவர்களாகவும், பலத்தை இழந்தவர்களாகவும் தோன்றினுல் ஏமாந்தவரைப் போல இராதீர்கள். நீஙகள் இழந்த பலத்தையும், தேக வலிமையையும் மறு முறையும் நீங்கள் நிச்சயமாய் அடையலாம் இதற்குக் கைகண்டது "ஹக்கோஸன்" ஒன்றே மற்றவைகளினுல் யாதொரு பிரயோஜனமும் படாது.

தேகத்திற்கு உற்சாகத்தையும் சுறு சுறுப்பையும் கொடுக்கக் கூடியது இந்த டானிக் ஒன்றே. இச்சிறந்த டானிக் ஜீரணசக்தியை அதிகப்படுத்தி ரத்தத்தைச் சுத்திசெய்கிறது.




பல பிரமிக வைத்தியர்களால் இது மிகவும் மேலானதெனச் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

# இந்தியர்களே! சற்று கவனியுங்கள்!

——oo——

**'இலங்கை இந்தியன்' பத்திரிகைக்கு நீங்கள் ஏன் சந்தாதாரராக சேர வேண்டும் என்பதற்கு காரணங்கள் ஆறுஉள. அவை:—**

1. இலங்கையில் இந்தியர்களுக்காக ஊக்கத்துடன் உழைக்கும் தமிழ்பத்திரிகை இது ஒன்றே.

2. இப்பத்திரிகை நடத்துவதில் உடமஸ்தருக்கு ஏற்படும் தியாகத்தையும் பணநஷ்டத்தையும் பொருள் படுத்தாது இந்தியரின் நலத்தையே முக்கிய நோக்கமாக கருதி இப்பத்திரிகை பாடுபட்டு வருகிறது.

3. இப்பத்திரிகையின் அபிப்பிராயங்கள் இந்தியா கவர்மெண்டாலும் இலங்கை கவர்மெண்டாலும் நன்குமதிக்கப்படுகின்றன.

4. இப்பத்திரிகையானது இத்தீவிலுள்ள இந்தியரின் மனோபாவத்தையும் அவரது அபிப்பிராயங்களையும்உள்ளவாறே விளக்கி காட்டுகின்றது.

5. பத்திரிகை பிரசுரிப்பதி லேற்படும் செலவுக்குமட்டும் போதுமானபடி பத்திரிகையின் சந்தா மிககுறைவாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் சிறிதும் தாமதமின்றி, இத்துடன் சேர்த்திருக்கும் பாரத்தை பூர்த்திசெய்து எங்களுக்கு உடனே அனுப்புங்கள்!

6. இப்பத்திரிகையை ஓர் பிழைக்கும் வழியாகக் கருதி இதன் சொந்தக்காரர் நடத்திவரவில்லை. அவர் தன் செலவுகளை நிர்வகிக்கும் பொருட்டு இதனை நடத்தவுமில்லை. த க்கேற்பட்டுள்ள சொந்தத் தொழிலில் அரும்பாடுபட்டுச் சேர்க்கும் பொருளையே அதன் மூலதனமாக வைத்து அதனை நடத்திவருகிறார். தனது தொழிலி லீடுபட்டு சுலபமாக ப த்தைத் தேடுவதற்குரிய நேரத்தையும் அதற்காகவே தியாகம் செய்துவருகிறார்.

சந்தாதாரராக சேருவோர் தயவுசெய்து கீழ்க்கண்ட துண்டைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.
"இலங்கை இந்தியன்" மனேஜரவர்களுக்கு,
107,B, ஹல்ஸ்டாரப் தெரு, கொழும்பு.

**சந்தா விபரம்.**

—o—

| | | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை முக்கிய இடங்களுக்கு | வருட சந்தா | ரூ. 5-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-00. |
| வெளி நாடுகளுக்கு | வருட சந்தா | ரூ. 6-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-50. |

ஐயா,

அடியிற் கையொப்பமிட்ட என்னைத் தங்களுடைய "இலங்கை இந்தியன்" தமிழ் வாரப் பத்திரிகைக்கு ஒரு வருட / 6 மாத சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒப்பம்.......................................

பெயர்.......................................

விலாசம்.......................................

.......................................

குறிப்பு:- தயவுசெய்து பெயரையும், விலாசத்தையும், தெளிவாக எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோ

Printed and published for the Proprietor by H. Nelliah B. A. [residing at 97 Maliban St. Colombo] at the "Ceylon Indian" Printing Works, 107 B. Hulftsdorp Street, Colombo.